# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • அக்டோபர் 12, 2019

Weekly E-paper • OCTOBER 12, 2019




# பிரம்மாண்டங்களில் மூழ்கும் உண்மைகள்!

சுப. வீரபாண்டியன்



## 'அசுரன்' ஒருவன் போதாது

வேந்தன்

## உளறுவதே வாடிக்கை

தலையங்கம்



## மரணத்தை நோக்கி மாபெரும் நூலகம்

இக்லாஸ் உசேன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● அக்டோபர் 12, 2019 Weekly E-paper ● OCTOBER 12, 2019


# பிரம்மாண்டங்களில் மூழ்கும் உண்மைகள்!

● சுப. வீரபாண்டியன்


சீன அதிபரின் வருகை, தேவ தூதரின் வருகை போல இங்கே கொண்டாடப்படுகிறது.



நாடு முழுவதும் இதே பேச்சு. ஊடகங்களில் வேறு செய்திகளே இல்லை. பொதுவாக வெளிநாட்டு அதிபர்கள் தில்லி வந்து போவார்கள். ஆனால் இப்போது சீன அதிபர் ஜி ஜின்பிங், இந்தியப் பிரதமர் மோடியுடன் தமிழ்நாட்டில் உள்ள மாமல்லபுரத்திற்கு வருகிறார் . ஒரே கொண்டாட்டமாக இருக்கிறது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் நல்லுறவு ஏற்படுவது; அதிலும் வலிமையான ஓர் அண்டை நாட்டுடன் உறவு புதுப்பிக்கப்படுவது நல்லதுதான். இருப்பினும் இந்தச் சந்திப்பு, அரசு முறையிலானதா அல்லது சுற்றுப்பயணம் போன்றதா என்பதே தெளிவாகத் தெரியவில்லை. இருவரும் எது எது குறித்தெல்லாம் பேசப் போகின்றனர் என்னும் செய்தி விரிவாகச் சொல்லப்படவில்லை.

எப்படியிருப்பினும், இந்தச் சந்திப்பால் சீனாவிற்குச் சில நன்மைகள் கண்டிப்பாக உண்டு. 1970 களின் இறுதியில், இந்தியா, சீனா ஆகிய இரண்டு நாடுகளும், பொருளாதார நிலையில் சற்று முன்னும் பின்னுமாக இருந்தன. பெரிய வேறுபாடு இல்லை. 2000 ஆம் ஆண்டுக் கணக்கின்படி, இந்தியாவை விடச் சீனா இரண்டரை மடங்கு உயர்ந்து நின்றது. இப்போது ஐந்து மடங்கு பெரிதாக வளர்ந்துள்ளது.




பொருளாதாரத்தில் மட்டுமின்றி, ராணுவம், அறிவியல், வணிகம் என்று எல்லாத் துறைகளிலும் நம்மை விடப் பல மடங்கு உயரத்தில் சீனா உள்ளது. மக்கள் தொகையில் மட்டும்தான் நாம் அவர்களை நெருங்கிக் கொண்டுள்ளோம்.

அமெரிக்கா, சோவியத் என இருமுனையின் கீழ் இயங்கிவந்த உலகம், அமெரிக்கா என்னும் ஒருமுனையின் கீழ் சென்றுவிட்டதன் பின், அதற்கு இணையாகச் சீனாதான் வளர்ந்து வருகின்றது. எனினும் இப்போது அமெரிக்க-சீன உறவில் ஒரு விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனைச் சரிக்கட்டியாக வேண்டிய நிலையில் சீனா உள்ளது. இந்தியா என்னும் பெரிய சந்தை அதற்கு உதவலாம்.

இந்திய அரசுக்கும் இப்போது ஒரு தேவை உள்ளது. காஷ்மீர் குறித்துப் பாகிஸ்தான் அதிபர் அண்மையில் சீனா சென்று ஜி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். எப்போதும் பாகிஸ்தானுடன் நட்புறவுடன் இருக்கும் சீனா இப்போது நடுநிலை போலக் காட்டிக் கொள்கிறது.

சீனாவிலும் பல சிக்கல்கள் உள்ளன. 1959 ஆம் ஆண்டு வெளியான திபெத் தனி நாடு என்ற அறிவிப்புக்கு ஆதரவு காட்டியது இந்தியா. தர்மசாலா என்ற இடத்தில் திபெத் அரசு இயங்குவதற்கும் இடம் தந்தது. அந்தக் கோபம் சீனாவிற்கு இன்னும் தணிந்தபாடில்லை. புதிதாக இன்று சீனாவின் ஆளுகைக்குட்பட்டிருக்கிற ஹாங்காங், கலவரங்களால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில், மாமல்லபுரத்தில் நடைபெறவிருக்கும் சந்திப்பு, வேறு ஒப்பந்தங்களைக் கொண்டு வருகிறதோ இல்லையோ, காஷ்மீர் பற்றிச் சீனாவும், ஹாங்காங் பற்றி இந்தியாவும் பேசாமல் இருப்பதற்கான எழுதப்படாத ஒப்பந்தத்தைக் கண்டிப்பாகக் கொண்டுவரும்! அருணாசலப் பிரதேசம் பற்றியும் மோடி ஜி ஜின்பிங்குடன் பேசிவிட மாட்டார்.

இந்த உண்மைகள் உரத்துப் பேசப்படாமல் போய்விட வேண்டும் என்பதற்காகவே, மாமல்லபுரம் விழாக் கோலம் கொண்டிருக்கிறது. பிரம்மாண்டத்திலும், கொண்டாட்டத்திலும் உண்மைகள் மூழ்கிக் கொண்டிருக்கின்றன. ●

# ‘அசுரன்’ ஒருவன் போதாது

● வேந்தன்

எழுத்தாளர் பூமணி எழுதிய 'வெக்கை' என்னும் நாவலைத் தழுவி சமீபத்தில் இயக்குனர் வெற்றிமாறன் இயக்கி தனுஷ், மஞ்சு வாரியர் நடிப்பில் வெளியாகியிருக்கும் 'அசுரன்' திரைப்படம் பலரின் பாராட்டுக்களைப் பெற்றுள்ளது.




திரைப்படங்கள் எல்லாமே வணிகம் சார்ந்தவைதான். வணிக, லாப நோக்கத்திற்காக எடுக்கப்படும் திரைப்படங்கள் சாதியை ஒழித்துவிடுமா என்ற கேள்வி இப்படத்தை நோக்கி எழுந்தாலும், நாம் நுணுகிப் பார்க்க வேண்டியது எதுவென்றால், இதுவரை வணிக நோக்கத்திற்காகவும் கூட ஜாதி தீண்டாமைக் கொடுமைகளுக்கு உள்ளான மக்களைப் பற்றிய கதைகளைப் படங்களாக எடுக்க வேண்டும் என்று திரைத்துறையில் தயாரிப்பாளர்களோ இயக்குனர்களோ சிந்தித்ததில்லை என்பதைத்தான். பஞ்சமி நிலம் பறிப்பு, தீண்டாமை போன்ற வரலாற்றுக் கொடுமைகளை நேர்மையுடன் பதிவு செய்துள்ளதற்காகவே பாராட்டலாம். சமீப காலங்களில்தான் வணிக நோக்கத்திற்காகவாவது இது போன்ற படங்கள் அரிதாக எடுக்கப்படுகின்றன. முன்னர் அரிதினும் அரிதாக வந்திருக்கலாம்.

தீண்டாமை இழிவை அனுபவித்த மக்களின் கதைகள் தீண்டாக் கதைகளாக இருப்பதில் ஆச்சரியமேதுமில்லையே!

ஜாதிய வடிவம்தான் சமூகம் என்று இயங்கிக் கொண்டிருக்கும் இச்சமூகத்தில் இது போன்ற படங்கள் குறிப்பிட்ட சமூகத்தினரால் புறக்கணிப்பட்டு வணிக ரீதியாகவும் மிகப்பெரிய சவாலை சந்திக்க வேண்டியிருக்கும். “ஆண்ட பரம்பரை வசனம் எங்களைப் புண்படுத்துகிறது. எனவே நீக்க வேண்டும்” என்று கருணாஸ் கோரிக்கை வேறு. பாமக கட்சியைச் சேர்ந்த, நாடார் சமூகத்தைச் சேர்ந்த சிலர் இப்படத்தைத் தன் சமூகத்தார் பார்க்கவேண்டாம் என்று முகநூலில் பதிவிட்டதை நாம் பார்த்தோம். ஜாதி இந்துக்கள் புறக்கணித்தாலும், சமூக முரண்பாட்டைக் கூர்மைப் படுத்துவதைத் தவிர்த்து, விவாதத்தன்மைகளை ஏற்படுத்தி, மனித மாண்புகளை மதிக்கும் ஜனநாயக உணர்வுகளை ஏற்படுத்துவதாக ஒரு படைப்பு அமைய வேண்டும். அவர்களுக்கான உரிமைகளையும் சேர்த்தே பேச வேண்டும். ஒரு படம் சமூகத்தில் பெரிய மாற்றங்களை நிகழ்த்திவிடாது. தொடர்ச்சியாக இது போன்ற படங்கள் வரவேண்டும். ஜாதியையே தம் பண்பாடாகப் பின்பற்றும் மக்களிடம் தொடர்ச்சியாக உரையாடலை நிகழ்த்தவேண்டும்.

அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால் இப்படம் அந்தப் பணியைக் கடுகளவேனும் சாதித்துள்ளது என்பதை அரங்கத்தின் கரவொலி நமக்கு உணர்த்துகின்றது. குறிப்பாகச் செருப்பு அணிந்த பெண் அவமானப்படுத்தப்பட்டு கொடுமைக்குள்ளாகும் போது நாயகன் தானும் செருப்பணிந்து ஜாதி இந்துக்களைத் திருப்பி அடித்து மீண்டும் பள்ளிக்குச் செருப்பணிந்து செல்லச் சொல்லும் போதும் பாதுகாப்பாகக் கூடவே நடந்து வரும்போதும் "நீ போ.. எவன் வரான்னு நான் பாத்துக்கிறேன்.." என்ற அந்தக் காட்சியும், "காடு இருந்தா பறிச்சுக்குவாங்க.. காசு இருந்தா பறிச்சுக்குவாங்க.. படி அதை யாரும் பறிக்க முடியாது. அதிகாரத்திற்கு போ.. ஆனா அவங்க நமக்கு செய்றத நீ அவங்களுக்கு செய்யாத" என்ற காட்சியும் ஜாதியைத் தாண்டிய கரவொலிகளை அள்ளியது. நம் முன்னோர்கள் இப்படி இருந்திருக்கிறார்கள் என்ற சின்னக் கீற்று எழாமல் எந்த ஜாதிஇந்துவும் இருக்கையை விட்டு எழுந்திருக்க முடியாது.



கொலைக்குக் கொலையோ, பழிக்குப் பழியோ தீர்வாகாது என்பதைத் தனக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களில் இருந்து உணர்கிறான் நாயகன். அதனால் தான் வேட்டைக்காரர்களை அடிக்கும் போது கூட கத்தியை மழுங்கிய பக்கமாக வைத்து அடித்து அவர்களைக் கொல்லும் நோக்கம் இல்லையென்பதாகக் காட்சிகள் இருக்கும். அதே நாயகன் தன் மகனைக் காப்பாற்றும் காட்சியில் தற்காத்துக்கொள்ளவும் தன் மகனை மீட்கவும் எதிரிகளை வெட்டுகிறான். நம் சந்ததிக்குப் பிறகு இன்னொரு சந்ததி இருக்க வேண்டும் என்று சிந்திக்கும் நாயகன் சராசரி அப்பாவாகத் தோன்றலாம். ஆனால் அவன் சராசரி அப்பா அல்ல. கோபத்தில் நாம் செய்யும் எதிர்வினைகளால் நம் சந்ததிக்குப் பிறகு இன்னொரு சந்ததி பாதிப்புக்குள்ளாகக் கூடாது என்று சிந்திக்கும் தலைவன். அதையே நாம் அரசியல் இயக்கங்களுக்கும் கட்சிகளுக்கும் அவற்றை வழி நடத்தும் தலைமைக்கும் பொருத்திப் பார்க்கலாம்.

தருமபுரியில், மரக்காணத்தில் தலித் மக்களின் வீடுகளை ஜாதி இந்துக்கள் சூறையாடியதற்குப் பதிலாக மீண்டும் தலித் மக்களை அவர்களின் வீட்டைச் சூறையாடுங்கள் என்று ஏவி விட்டிருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும்? (மக்களை ஏவி விட ஒரு தலைவன் தேவையில்லை. ஒரு ரவுடி போதும். நான் ரவுடியாக இருக்க விரும்பவில்லை. மக்களை அரசியல் படுத்தும் சரியான தலைவனாக இருக்க விரும்புகிறேன் என்று விசிக தலைவர் திருமாவளவன் அப்போதைய பதட்டமான சூழலில் சொன்னது இங்கு நினைவு கூறத்தக்கது) ஜாதியவாதிகளே அரசு அதிகாரிகளாக வீற்றிருக்கும் அரசுத்துறைகள் என்ன செய்திருக்கும்? இப்படத்தில் வடக்கத்தான் கொலை செய்தான் என்று தெரிந்தும் அவனுக்குப் பாதுகாப்பு அளித்து, தெற்கத்தான் வீட்டாரை மிரட்டும் அதிகாரிகள் போல, தலித் மக்களின் மீதுதான் கைது, சிறைவாசம் என்று தன் அதிகாரத்தை ஏவி, தலித் மக்களைக் கொடுமைபடுத்தும் காவல்துறை. கண்கண்ட உதாரணம் ஏராளம். தமிழ்நாடே ஒன்று கூடிய ஜல்லிக்கட்டு போராட்டத்தின் இறுதிக் காட்சியில் யார் பலியானார்கள் காவல்துறைக்கு? சென்னை மீனவ குப்பங்களும், தலித் மக்கள் குடியிருப்புகளும்தான்.

எம்ஜிஆர் இறந்த போது தன் சிலையை உடைக்கும் தொண்டனைப் பார்த்துக் கலைஞர், சிலை உடைத்தவனின் கைகளையும் அவர்களின் தலைவர் சிலைகளையும் உடையுங்கள் என்று தவறான கட்டளை இட்டிருந்தால் அன்று என்ன நடந்திருக்கும்?

தன் மீது செருப்பு போட்ட பார்ப்பனர்களின் கைகளை முறியுங்கள் என்று பெரியார் சொல்லி இருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? இட ஒதுக்கீடு தொடர்பாக காந்தி சாகும் வரை உண்ணாவிரதம் அறிவித்த போது காந்தி இறந்தாலும் பரவாயில்லை என்று டாக்டர் அம்பேத்கர் பிடிவாதம் பிடித்திருந்தால் என்ன நேர்ந்திருக்கும்? வரலாற்றுப் பழி மட்டுமல்ல. ஏற்கனவே அரசியல், சமூக அதிகார மட்டத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கும் தலித் மக்களை இந்த நாட்டின் வரலாற்றுப் பகைவர்களாக அது மாற்றியிருக்கும். ஜாதி இந்துக்கள் நீதியாளர்கள் என்ற முகமூடி அணிய, மாறாக தலித் மக்கள் அநீதியாளர்களாக வரலாற்றில் கட்டமைக்கப்பட்டிருப்பார்கள்.

ஒரு தலைமை என்பது மக்களையும் தொண்டர்களையும் அரசியல்படுத்த வேண்டும். போராட்டங்கள் அரசியலை உள்ளடக்கி இருக்க வேண்டும். அப்போதுதான் அது அடுத்த தலைமுறைக்கும் ஜனநாயகத்துக்குமான சரியான பாதையைக் காட்ட முடியும். இல்லையேல், மாமேதை லெனின் சொன்னது போல இளம்பருவ கோளாறாகத்தான் முடியும் அல்லது தனிநபர் காழ்ப்புணர்வை கக்கும் பாசிச அரசியலில் முடியும்.

திரைக்கதைக் கோர்வையில் கவனம் செலுத்தி ஒரு முழுமையான படமாகக் கொடுத்துள்ளார்

●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
ஸ்ரீவித்யா

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408







தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## உளறுவதே வாடிக்கை

*நீட் தேர்வு ஆள் மாறாட்டத்திற்கு ‘வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்’ கமலஹாசன்தான் காரணம் என்கிறார் அமைச்சர் ஜெயக்குமார்.*

*பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. அரசுகள் இருக்கும்வரை நீட் தேர்வு தொடரும். நீட் தேர்வு உயர் சாதியினருக்குச் சாதகமாக இருக்கிறது என்பது உண்மைதான். ஆனாலும் அவர்களும் சமூகத்தின் ஓர் அங்கம்தானே என்கிறார் அமைச்சர் விஜயபாஸ்கர்.*

*தமிழ்நாட்டு மந்திரிகள் ஒருவருக்கும் உள்ளூர் வங்கிகளில் பணமே இல்லை என்று சொல்லியிருக்கிறார் அமைச்சர் ராஜேந்திர பாலாஜி.*

*வைக்கப்படும் பேனர் காற்றடித்துத்தான் விழுகிறது. ஆகவே காற்றின் மீதுதான் வழக்குப் போட வேண்டும் என்கிறார் அமைச்சர் பொன்னையன்.*

*சென்னை உயர்நீதிமன்றம் அமைச்சர் பொன்னையனின் பேச்சை ஏற்க முடியாது என்று கடுமையாகக் கூறியிருக்கிறது.*

*ஒன்று மத்திய அரசுக்கு ஆதரவாகப் பேசுகிறார்கள். அல்லது தான்தோன்றித்தனமாகப் உளறுகிறார்கள்.*

*மக்களைப் பற்றியோ, தமிழகத்தைப் பற்றியோ இவர்கள் சிந்திப்பதும் இல்லை, பேசுவதும் இல்லை.*

*ஜெயலலிதா மீது நமக்கு விமர்சனங்கள் இருக்கின்றன. ஆனாலும் இந்த மந்திரிகளைப் பேசவிடாமல், வாய்ப்பூட்டு போட்டு வைத்திருந்தக் காரணம் இப்பொழுதுதான் தெரிகிறது.*



# மரணத்தை நோக்கி மாபெரும் நூலகம்

● இக்லாஸ் உசேன்

ஓர் இனத்தை அழிக்கவேண்டுமானால் முதலில் அவர்களின் இலக்கியத்தை அழிக்க வேண்டும் என்பார்கள்.

ஹிட்லர், நாசிச ஆட்சி என்ற கொடுங்கோல் ஆட்சியை ஆளத்தொடங்கியதும் செய்த முதல் கொடூரம் தனது நாட்டு நூலகங்களைத் தீக்கிரையாக்கியதுதான். ஈழத்தமிழர்களை ஒடுக்க நினைத்த சிங்களர்கள் தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமான யாழ்ப்பாண நூலகத்தை 1981இல் தீக்கிரையாக்கினார்கள்.

ஹிட்லரால் ஜெர்மனியிலும், சிங்களர்களால் ஈழத்திலும் நடந்த இலக்கிய அழிப்பு, நம் மாநிலத்திலும் அரங்கேறத் தொடங்கியது 2011இல் அதிமுக அரியணை ஏறியபோது. ஆம்! இந்தியாவிலே அல்ல, தெற்காசியாவிலேயே பெரிய நூலகம் என்ற பெருமிதத்தோடு சென்னை கோட்டூர்புரத்தில் இயங்கிய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அழித்தொழிக்கும் வேலையைத் தொடங்கியது ஜெயலலிதாவின் அதிமுக அரசு.

ஓமந்தூரார் தோட்டத்தில் திமுக ஆட்சியில் கட்டப்பட்ட புதிய தலைமைச் செயலகத்தை மருத்துவமனையாக வெற்றிகரமாக மாற்றிய மமதையில், தமிழகத்தின் மகுடமாக, அறிவுச்சுடராக, ஒளிக்கீற்றாக இருக்கும் அண்ணா நூலகத்தை அழிக்கும் வேலையைத் தொடங்கினார் ஜெயலலிதா.

தமிழக மக்களை அறிவிலிகளாக மாற்றும் மூடச்சிந்தனையோடு, திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட அனைத்தையும் ஒழிக்க வேண்டும் என்ற கொள்கையைக் குறிக்கோளாகக் கொண்ட ஜெயலலிதாவின் தனிப்பட்ட வெறுப்பால் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைக் குழந்தைகளுக்கான மருத்துவமனையாக மாற்றப்போகிறோம் என்று ஜெயலலிதா அறிவித்தார். அதற்கு நீதிமன்றம் மூலம் தடை உத்தரவு வாங்கி நூலகத்தைக் காப்பாற்றிய போது, ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்வதைக் கெடுக்கும் நோக்கிலும், வாசிப்பவர்களை விரட்டும் நோக்கிலும் 2012இல் நூலக அரங்கைத் திருமணத்துக்கு வாடகைக்கு விடும் கூத்தை ஜெ. அரசு செய்தது..

அதற்கும் உடனடியாக நீதிமன்றத்தில் தடை உத்தரவு வாங்கி அண்ணா நூலகத்தை உயிரோடு காப்பாற்றினாலும் இந்த ஏழு ஆண்டுகளாகக் கோமா நிலையில்தான் நூலகம் இயங்கிவருகிறது. நூலகம் 2010இல் தொடங்கப்பட்ட நிலையைச் சொல்ல வேண்டுமென்றால்....

- 3.75 இலட்சம் சதுர அடிப் பரப்பில் அமைந்துள்ள ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய நூலகம்..
- தரைத்தளம் நீங்கலாக 8 தளங்களைக் கொண்டது.
- பல்வேறு துறைகளைச் சார்ந்த பல லட்சம் புத்தகங்களைத் தன்னகத்தே கொண்டுள்ள நூலகம்,
- நூலகத்தின் மற்றொரு குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் "உலக இணைய மின் நூலகத்துடன்" (World Digital Library) நூலகம் இணைக்கப்பட்டுள்ளது. யுனெஸ்கோ உலக இணைய மின் நூலகத்துடனும் இணைக்கப்பட்டுள்ளது.
- படிப்பு சார்ந்த நிகழ்ச்சி நடத்த உள்அரங்கு மற்றும் பளிங்குக் கற்களால் ஆன இருக்கை கொண்ட அரைவட்ட வடிவிலான மிகப்பெரிய வெளியரங்கம்
- நூலகம் முழுக்கக் குளிர்சாதன வசதி.




- ஒவ்வொரு தளத்திலும் கழிவறை வசதி, குடிநீர் வசதி.
- பார்வையற்றோர்களுக்குத் தனிப்பிரிவு.
- வீட்டில் இருந்து புத்தகம் எடுத்து வந்து படிக்க ஒரு தனித் தளம் (இன்று இந்தத் தளத்தில்தான் கூட்டம் நிரம்பி இருக்கிறது)
- தரைத்தளத்தில் உணவகங்கள்
- குழந்தைகளுக்குத் தனிப்பிரிவு

என்று தமிழகத்தின் கிரீடமாகக் கலைஞர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட அண்ணா நூலகம், இன்று பராமரிப்புப் பணிகள் ஏதுமில்லாமல்!

மூன்றாம் தரத் திரையரங்கின் கழிவறைகள் போல நூலகத்தின் கழிவறைகள். பத்தாண்டுக்கு முன் போடப்பட்ட தரை விரிப்பு அழுக்கேறிப்போய்க் கிடக்கக் கடந்த ஒன்பது ஆண்டுகளாகப் புதிதாகப் புத்தகங்கள் ஏதும் வாங்கப்படாத நிலை! உணவகங்கள் காணாமல் போய் ஒரே ஒரு ஆவின் பாலகம் மட்டுமே அங்கு செயல்படுகிறது.

அவ்வளவு பெரிய நூலகத்தில் தலைமை இயக்குநரே இல்லாத (அ) பணிக்கு வராத நிலை!

புனரமைப்பு செய்யாததால் அங்கங்கு தேனீக்கள் கூடு, சிலந்திகளின் கூடு, கட்டட விரிசல் எனப் பொலிவற்றுப் போய், ஆட்கொல்லிப் புற்றுநோயைப் போல அதிமுக அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்று இன்று கோமா நிலையில் ஆக்கி வைத்துள்ளது.

தமிழகத்தின் அறிவு சார்ந்த நூலகத்தை அழிப்பது, மழலைக் கல்வியில் பொதுத்தேர்வைத் திணிப்பது, மருத்துவக் கல்வியில் நீட் தேர்வைத் திணித்தது, தமிழனின் தொன்மை நாகரிகமான கீழடியை ஆய்வு செய்யவிடாமல் முடக்குவது, செம்மொழி ஆய்வு நிறுவனத்தைச் சிதைத்து வருவது என்று தமிழையும் தமிழர்களையும் அழித்தொழிக்கும் வேலையை நாம் தேர்ந்தெடுத்த ஆட்சியாளர்களே செய்கிறார்கள்.

இவை அனைத்தும் அறிந்தும், அறியாததுபோல் வாய்ப்பேச்சு வீரனாய், எதிர்த்துப் போராட முதுகெலும்பு அற்ற குடிகளாக இன்றையத் தமிழ்ச் சமூகம் வாழ்ந்து வருமானால், வீழ்வது நாமல்ல, நம் எதிர்காலத் தலைமுறையாகத்தான் இருக்கும். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,